**OPEN ACCESS**

Manuscript ID: TAM-08012023-6628

Volume: 8

Issue: 1

Month: July

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.04.2023

Accepted: 29.05.2023

Published: 01.07.2023

Citation:
Anulakshmi, S. "Natrinaiyil Kurunthozhilgal." *Shanlax International Journal of Tamil Research*, vol. 8, no. 1, 2023, pp. 47–53.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i1.6628

*Corresponding Author:
anuganeshan2018@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Natrinaiyil Kurunthozhilgal

**S. Anulakshmi**
*Assistant Professor, Department of Tamil Studies*
*Holy Cross College (Autonomous), Tiruchirappalli, Tamil Nadu, India*
*https://orcid.org/0009-0001-9183-8145*

**Abstract**

The Sangam literature sings with nature as the backdrop to express the feelings and desires of the Tamils. The people divided their habitat into five types of land and carried out the occupation of the land. Human beings who lived as nomads began to live together many years later. The man gave priority to labour. If the country is to prosper, the economy of the country needs to prosper. The development of various industries is also essential for the prosperity of the country. Agriculture was the main occupation during the Sangam period. In addition, domestic and foreign trade also took the lead in economic growth. In addition to this, weaving, rearing cattle, pottery making, flower selling, etc., brought daily income to the people. The purpose of this article is to study such micro-industries.

**Key Words:** Sangam Literature, Micro-Industries, Natrinai, Literature, Criticism, Professions.

**References**

1. Narayanasamy Iyer. 2007. *Natrinai Moolamum Uraiyum*, Chennai, Kazhaga Veliyeedu, Reprint.
2. Iraiyarasan, P. 1993. *Tamilar Nagareega Varalaru*, Chennai, Poompuhar Publishing House.
3. Subramanyan, N. 2010. *Sangakala Vazhviyal*, Chennai, New Century Book House.
4. Dakshinamurthy, A. 1999. *Tamilar Nagareegamum Panpadum*, Chennai, Yazh Veliyeedu.
5. Suba Manickam, V. 1999. *Thirukkural Thelivurai*, Chennai, Manivasagar Publishing.

# நற்றிணையில் குறுந்தொழில்கள்

*முனைவர் சு. அனுலெட்சுமி*
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

***ஆய்வுச்சுருக்கம்***
*தமிழர்களின் உள்ளத்து உணர்ச்சிகளையும், வேட்கைகளையும் புலப்படுத்துவதற்கு இயற்கையைப் பின்னணியாகக் கொண்டு பாடப்பட்டவை சங்க இலக்கியங்கள். மக்கள் தங்களின் வாழிடத்தை ஐவகை நிலங்களாகப் பகுத்து அந்நிலத்திற்குரிய தொழிலைச் செய்தனர். நாடோடியாக வாழ்ந்த மனிதர்கள் பின்னர் ஒன்றாகச் சேர்ந்து வாழத் தொடங்கினர். ஆண்மகன் என்பவன் உழைப்புக்கு முன்னுரிமை வழங்கினான். நாடு வளம்பெற்று இருக்கவேண்டும் என்றால் அந்நாட்டின் பொருளாதாரம் செழிப்பாக இருத்தல் அவசியம். நாடு வளம் பெற பலவிதமான தொழில்களின் வளர்ச்சியும் இன்றியமையானது. சங்க காலத்தில் வேளாண்மை முக்கியத் தொழிலாக விளங்கியது. அதனோடு உள்நாட்டு, அயல்நாட்டு வணிகமும் பொருளாதார வளர்ச்சியில் முன்னிலை வகித்தன. இதனோடு நெசவு, கால்நடை வளர்த்தல், மட்பாண்டம் செய்தல், பூவிற்றல், போன்ற தொழில்கள் மக்களுக்கு அன்றாட வருவாயை ஈட்டித் தந்தன. இத்தகைய குறுந்தொழில்களைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*
***திறவுச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், நற்றிணை, திறனாய்வு, தொழில்கள்*

மலைகளை உடைத்து காடுகளாக்கியும், வயல்களாக்கியும், பெரும் நிலப்பகுதியை உருவாக்கினான் அப்பகுதிக்கு அவனே தலைவனாகவும் பின்னாளில் அரசனாகவும் முடிசூட்டப்பட்டான். மனிதனின் அடிப்படை தேவைகளான உணவு, உடை, உறையுள் என தனக்கு வேண்டியதை தானே உருவாக்க கற்றுக்கொண்டான் அவற்றில் உழவுத் தொழிலை முதன்மைப்படுத்தித் தன்னை உலகிற்கு உணர்த்தினான்

**“சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை”**[1]

என்பார் வள்ளுவர் மனிதர்கள்

பல தொழில்கள் செய்து வந்தாலும் உழவுத் தொழிலின் பின்னால்தான் இவ்வுலகம் செல்கிறது. அன்று அரசனின் வேண்டுகோளுக்கு இணங்க மக்கள் அனைவரும் தனித்தனியே வேலை செய்வதற்கென ஒதுக்கப்பட்டனர். அரசனின் கட்டளையை ஏற்று தலைமேல் சுமந்து செய்தனர். தனக்கென கிடைத்த வேலையைப் பெருமையாகக் கருதினர் தன்னுடைய வேலையைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுக்கும் பொழுது உரிமைக்காக போராடிச் சண்டையிடவும் செய்தனர்.

பண்டையக் காலத்தில் அரசரால் பிரிக்கப்பட்ட வேலைகள் பின்னாளில் அவர்களுடைய சந்ததியினர்களுக்குத் தொழிலாக மாறிப் போயின. “தொழிலில் திறமை பெற தந்தை தொழிலை மகன் ஏற்றதால் பரம்பரை தொழில்முறை உருவாகியது”[2] என்கிறார் பா.இறையரசன். நிலம் அதிகம் உள்ளவன் உழவுத்தொழில் செய்தான் தொழிலுக்கு தகுந்துவாறு மக்களைப் பயன்படுத்திக் கொண்டான். பெரும் பொருள் உள்ளவன் உள்நாட்டு, அயல்நாட்டு வாணிகம் செய்தான் சிலர் அரண்மனைகளில் வேலை செய்தனர்

படை வீரர்கள், காவலர்கள், ஊர்மன்ற தலைவர்கள், ஒற்றர்கள் என அரசு சம்பந்த வேலைகளில் பணியமர்த்தப்பட்டனர் இவை தவிர மக்கள் வாழ்கின்ற பகுதியில் அன்றாடம் நடைபெறக்கூடிய தொழில்களும் இருந்து வந்தன. உழவு, வணிகம் தவிர இன்னும் பல குறுந்தொழில்களைச் செய்தனர்.

### கொல்லர்

கொல்லர்களில் இரும்புக்கொல்லர், பொற்கொல்லர் எனத் தனித்தனியாக தொழில் பாகுப்படுத்தப்படுகிறது. ஒன்றை அழித்து செய்வதால் கொல்லுதல் என வந்திருந்து பிறகு கொல்லன், கொல்லர் என வந்திருக்கலாம்.

> **"இரும்பு செய் கொல்லன் வெவ்வுலைத் தெளித்த"** ***(நற்.133:9)***

இரும்பை உருக்கி அடிக்கின்ற கொல்லன் பழுக்கக் காய்ச்சிய இரும்பின் மீது பனை மடலால் சிறிது நீர் தெளித்தது போல இரும்பை நெருப்பில் காய்ச்சி அடிக்கும் போது அப்பொருள் உறுதிபட செய்ய அவற்றின் மீது நீர்த்தெளித்து அடிக்கும் நிகழ்வினை சுட்டுகின்றது.

> **"..........கொல்லன்**
> **எறிபொற் பிதிரின் சிறுபல் காய"**
> ***(நற்.13: 5-6)***

உலைகளத்தில் அடிக்கும் இரும்பின் பொறி சிதறுவது போல என்று கொல்லனின் செயலினை உணர்த்துகிறது. "போர்ப்படைக்கலங்களை ஆக்கவும், திருத்தவும் கொல்லர் பட்டறைகள் இருந்தன. இப்பட்டறைத் தீயில் இரும்பு சக்கரங்கள் வீட்டுச் சாமான்கள் முதலியன ஆக்கப் பெற்றன"[3] என கொல்லன் பட்டறைப் பற்றி ந.சுப்ரமண்யன் கூறுகிறார்.

> **"......... உரறிக் கொல்லன்**
> **ஊதுலைக் குருகின் உள்ளுயிர்த்து அகழும்"**
> ***(நற்.125: 3-4)***

கொல்லனின் ஊதுகின்ற உலை மூக்கே போல பெருமூச்செறிந்து என்று கொல்லர்களின் பட்டறை மட்டும் அவர்களின் பணித் தன்மையினையும் இலக்கியங்கள் சான்று காட்டுகின்றன.

### பொற்கொல்லர்

நற்றிணைப் பாடலில் பொற் கொல்லர்கள் அணிகலன்கள் செய்வதற்கு "அரம்" என்ற கருவியைப் பயன்படுத்தியுள்ளனர். ஒளியுடைய வளையலையும், அகன்ற தொடியினையும் கூர்மையான அரத்தால் அராவிச் செய்த குறிப்பு காணப்படுகின்றது.

> **"பொன் செய் கொல்லனின் இனிய தெளிப்ப"**
> ***(நற்.313: 2)***

பொற்கொல்லர்கள் பொன் வேலை செய்யும் இடத்தில் எப்போதும் இனியதான ஓசைப் பிறக்குமாம் என்று ஆசிரியர் கூறுகின்றார். சங்க காலத் தமிழர்கள் பொன்னின் தரத்தை அறிவதற்கு கட்டளைக்கல் எனப்படும் உரைகல்லை பயன்படுத்தியுள்ளனர் என்பதை,

> **"நறுந்தாது ஆடிய தும்பி பசுங்கேழ்ப்**
> **பொன்னுரை கல்லின் நல்நிறம் பெறூஉம்"**
> ***(நற்.25 :3-4)***

என நற்றிணை சான்று தருகின்றது. மேலும் முத்து, மாணிக்கம், பொன் போன்றவற்றால் செய்த அணிகலன்களில் குறை இருந்தால் அதைத் திருத்தியும் அமைத்துள்ளனர் என்பதை

> **"உறுவினைக்கு அசாவா உலைவுகில் கம்மியன்**
> **பொறிஅறு பிணைக்கூட்டும்"**
> ***(நற்.363: 4-5)***

உடைந்த சிலம்புகளைச் செப்பம் செய்வதற்கும் தன் தொழிலைச் செய்வதில் சிறிதும் தளர்ச்சி கொள்ளாத கம்மியன் அச்சிலம்பினைச் சீர் செய்தமையை காணமுடிகிறது. முத்து, மாணிக்கம், பொன் போன்றவற்றால் அணி செய்யும் திறன் பெற்ற கொல்லர்கள் சங்க காலத்தில் இருந்தமையை அறியமுடிகிறது.

### குயவர்

மண்ணைக் கொண்டு பொருட்கள் செய்வோரை குயவர் என்றழைப்பர் இவர்களுடையத் தொழில் முழுக்க முழுக்க மண்ணை நம்பியே இருந்தது.

***"சாறென நுவலும் முதுவாய்க் குயவ"***
***(நற்.200 : 4)***

ஒளி வீசும் பூங்கொத்தினை உடைய நொச்சிமாலை சூடிய அறிவு வாய்ந்த குயவன் அகன்ற தெருவில் திருவிழா நடக்கப் போவதைக் கூறுகின்றான்.

***"பலிகள் ஆர்கைப் பார்முது குயவன்***
***இடுபலி நுவலும் அகன்தலை மன்றத்து"***
***(நற்.293: 2-3)***

பழங்குடியைச் சார்ந்த குயவன் நொச்சி மாலையைச் சூடி கடவுளுக்குப் பலியிட்ட கள்ளினைக் குடித்துவிட்டு, கடவுளுக்கு எவ்வகையான படையலை இடவேண்டும் என்பதைப் பலருக்கும் எடுத்துரைப்பவன் என்று திருவிழா எடுத்தலை ஊர்மன்றத்துக்கு உரைப்பவனும் குயவனே என்ற செய்தி நற்றிணையில் காணலாகிறது.

### சலவைத் தொழில்

துணிகளைத் துவைத்தல் இவர்களுடைய தொழிலாகக் கருதப்படுகின்றது. இவர்களை காழியர், வண்ணார், புலத்தி, வண்ணாத்தி என்றழைக்கலாயினர். "வண்ணாருக்கு 'காழியர்" என்னும் பெயரும் வழக்கத்தில் உள்ளது வண்ணாரப் பெண் புலைத்தி எனச் சுட்டப்படுகிறார். இதனால் அன்று இவர்கள் புலையர்களோடு ஒத்தவர்களாகக் கருதப்பட்டமை தெளிவாகும்"[4] என்று அ.தட்சணாமூர்த்தி சுட்டிக்காட்டுகின்றார். இவர்கள் சமுதாயத்தில் கீழ் நிலையிலுள்ள குடிகளாகக் காணப்பட்டனர். அந்த காலத்திலே சோப்பு கிடையாது அதனால் அழுக்கைப் போக்குவதற்காக உவர்மண்ணை பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆடைகள் விரைப்பாக இருப்பதற்குக் கஞ்சி போட்டு வெளுத்து இருக்கிறார்கள் "சாயம் தோய்த்தல் ஒரு பெருவாரியான கைத்தொழில் நீலச்சாயம் தோய்த்த அரை வேட்டிகளைத் துணி வாங்குவோர் மிகவும் விரும்பினர்"[5] என ந.சுப்ரமண்யன் கூறுகின்றார்.

***"வறன் இல் புலத்தி எல்லித் தோய்த்த***
***புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்க மொடு"***
***(நற்.90: 2-3)***

வண்ணாத்தி வெளுத்த பூவுடையினை அணிந்துக் கொண்டு தலைவி வருகிறாள் என்ற செய்தியினை நற்றிணை பதிவிடுகின்றது.

### பூ விற்றல்

சங்க காலப் பெண்கள் பூ விற்பனை செய்துள்ளமையை இலக்கியங்கள் பதிவிட்டுள்ளன.

***"...... பைங் குருக் கத்தியொடு***
***பித்திகை விரவுமலர் கொள்ளீரோ என***
***வண்டு சூழ் வட்டியள் திரிதரும்***
***தண்டலை உழவர் தனிமட மகளே"***
***(நற்.97 : 6-9)***

என்னும் அடிகள் மருத நில பெண்ணொருத்தி பூ விற்கும் கடகப் பெட்டியில் குருகத்தி, சண்பகம், போன்ற மலரை விற்பனை செய்தமையினையும்

***"துகலிகை அன்ன துய்த்தலைப் பாதிரி***
***வால் இதல் அலரி வண்டுபட ஏந்திப்"***
***(நற்.118 : 8-9)***

ஓவியரின் எழுதுகோல் போன்ற பாதிரி மலரை வட்டிலில் ஏந்தி தெருவில் கூவி பூவினை விற்பனை செய்கின்றாள். மருத நிலத்துப் பெண்கள் பூ விற்கும் தொழிலில் ஈடுபட்டமையும் அவர்கள் அவ்வப் பருவங்களில் மலரும் வண்டு மொய்க்கும் புது மலர்களைத் தெருக்கள் தோறும் திரிந்து விற்பனை செய்த பாங்கினை அறியமுடிகிறது.

### நெசவுத் தொழில்

கணவனை இழந்த மகளிரும், பொருளீட்டவும், போருக்காகவும் சென்ற கணவனைப் பிரிந்திருக்கும் மகளிரும் இல்லத்திலிருக்கும் மகளிரும் தம் குடும்ப பொருளாதாரத்தை ஈட்ட நெசவுத் தொழிலை வீட்டிலிருந்தே மேற்கொண்டனர். இவர்கள் 'பருத்தி பெண்டிர்'' 'ஆளிற் பெண்டிர்'' போன்ற சொற்களால் அழைக்கப்பட்டனர்.

> **"ஆளிற் பெண்டிர் தாளிற் செய்த**
> **நுணங்கு நுண் பணுவல் போல"**
> ***(நற்.353 : 1-2)***

என்றும் சங்ககால மக்கள் பருத்திப் பஞ்சை அதனுடைய கொட்டையிலிருந்துப் பிரித்தெடுக்க வில்லைப் பயன்படுத்தியுள்ளனர். பின்னர் பருத்திக் கொட்டையை நீக்கித் தூய்மை செய்யும்போது பஞ்சின்புறத்தோலினையும் எஞ்சி நிற்கும் கொட்டையினையும் தூசுகளையும் நீக்குவதற்காக நன்றாகப் புடைத்த செய்தியினை,

> **"அழிதுளி பொழிந்த இன்குரல் எழிலி**
> **எஃகுறு பஞ்சிற்று ஆகி"*(நற்.247 : 3-4)***

பருத்திப் பெண்டிர் இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் நூல் நூற்றள்ள செய்தியினைக் காண முடிகிறது.

### ஆடுமேய்த்தல்

முல்லை நிலத்தில் வாழும் ஆயர் இன மக்கள் ஆநிரைகளை வளர்த்தலை தொழிலாகச் செய்துள்ளனர்.

> **"கொல்லைக் கோவலர் குறும்புனம் சேர்ந்த**
> **குறுங்காற் குரவின் குவி இணர் வான்பு"**
> ***(நற்.266 : 1-2)***

கொல்லைப் புறங்களில் கோவலர் வாழ்வர் ஆங்காங்கே சிறிதாக அமைந்துள்ள காடுகளில் குறுகிய அடியினைக் கொண்ட குரவ மரத்தில் பூத்த பூக்களை ஆடுகளை மேய்க்கும் இடையர் சூடுவர் என்கின்ற செய்தி காணலாகிறது.

### ஓவியத் தொழில்

சங்க கால மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தமையால் விலங்குகள், பறவைகள், மரங்கள், மற்றும் ஏனைய உயிரினங்களின் உருவங்களை ஓவியங்களாக வரைந்துள்ளனர். ஓவியத்தின் தொடக்கமாகக் கோடுகள் வரைந்த பின்னர் இக்கோடுகளை இணைத்து முழு ஓவியத்தை வரைந்துள்ளனர். அழகிய வீடுகளுக்கு ஓவியங்கள் உவமையாகக் கூறப்பட்டுள்ளன. மேலும் வீடுகளிலும், அரண்மனைச் சுவர்களிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

> **"கரும்புடைத் தோளும் உடையவால்**
> **அணங்கே"** ***(நற்.39 : 11)***

பெண்கள் தங்களின் தோள்களில் ஓவியம் போன்ற தொய்யில் வரைந்துள்ளனர்.

> **"சிறு தோட் கோத்த செவ் அரிப்பறையின்**
> **கண்ணகத்து எழுதிய குரீஇப் போல"**
> ***(நற்.75 : 6-7)***

செல்வரின் பொன்னணிகளையுடைய புதல்வர் சிறிய தோளில் மாட்டியுள்ள பறையில் குருவிப் போன்ற ஓவியம் வரையப்பட்டுள்ளது. மேலும் ஓவியம் வரைவதற்கு ஒள்ளிய அரக்கினையுடைய எழுதுகோல் போன்ற தலையில் நுண்ணிய பஞ்சினையுடைய பாதிரி மலர் என்று குறிப்பிட்டுள்ளனர். பாதிரி மலர் ஓவியம் வரைபவரின் எழுதுகோல் போன்றுள்ளது என்பதை

> **"ஓவ மாக்கள் ஒளசுஅரக்கு ஊட்டிய**
> **துகலிகை அன்ன துய்த்தலைப் பாதிரி"**
> ***(நற்.118 : 7-8)***

என்ற அடிகள் உணர்த்துகிறது.

### வேட்டையாடுதல்

பழந்தமிழர் நீர்நாய், புலி, மான், யானை, பன்றி போன்ற விலங்குகளை வேட்டையாடியுள்ளனர். இவ்விலங்குகளைக் கைப்பற்ற நாய் உறுதுணையாக இருந்தது.

வில், அம்பு, குறுந்தடி, கற்பொறி, முதலிய கருவிகளைக் கொண்டு வேட்டையாடியுள்ளனர்.

**"உளமிசைத் தவிர்த்த முளவுமான் ஏற்றையொடு
மனைவாய் ஞமலி ஒருங்கு புடை ஆட"**
**(நற்.285 : 4-5)**

குறிஞ்சிநில வேட்டுவன் தான் வேட்டையாடிய முட்பன்றி இறைச்சியுடன் குடிசையில் நுழைந்தபோது அவ்வீட்டு நாய்கள் அவனது கால்களைப் பற்றிக் கொண்டு விளையாடியதும் வேட்டைத் தொழிலுக்கும் வீட்டுக் காவலுக்கும் நாய்கள் பயன்பட்டது புலனாகின்றது.

**"மரன் மேற் கொண்டு மான் கணந் தகைமர்
வெந்திறல் இளையவர் வேட்டெழுந்தாங்கு"**
**(நற்.111 : 4-5)**

வேட்டுவச் சிறுவர்கள் நெய்தல் நிலத்தில் மரங்களின் மேலே நின்று மான் வேட்டையாடியுள்ளனர்.

**"கொடுவில் கானவன் கோட்டுமா தொலைச்சிப்
பச்சூன் பெய்த் பகழி போலச்"**
**(நற்.75 : 6-7)**

மலைச்சாரலில் காணப்படும் பன்றியை அம்பு எய்து கொன்று அவ் அம்பினை மீண்டும் பன்றியின் உடலில் இருந்து எடுத்தபோது அம்பின் நுனியில் குருதி படர்ந்திருந்தது.

### வழிப்பறி

பாலை நிலத்தின் வழியே கடந்து செல்லும் மக்களின் பொருட்களைப் பறித்துக் கொள்வதோடு அவர்களைக் கொல்லவும் தயங்காதவர்கள் இவர்களை ஆறலைக் கள்வர் என்றழைத்தனர். வணிகர்கள் கூட்டமாகச் செல்லும்போது தம் உடைமைகளை இக்கள்வர்களிடமிருந்து காத்துக்கொள்ள கையில் வில்லேந்திய காவலர்களை அழைத்துச் சென்ற செய்தியை இலக்கியங்கள் பதிவிட்டுள்ளன.

**"துவர் செய் யாடைச் செந்தொடை மறவர்
அதர் பார்த்தல்கும் அஞ்சுவரு நெறியிடை"**
**(நற்.33 : 6-7)**

இரவுப் பொழுதில் துவர்ந்த நிறத்தையுடைய ஆடையினையும் செவ்விய அம்புத் தொடையைக் கொண்ட ஆறலைக் கள்வர் அச்சம் தரும் வழியில் இருந்தனர். மேலும்,

**"செங்கோல் வாளிக் கொடுவில் ஆடவர்
வம்ப மாக்கள் உயிர்த்திறம் பெயர்த்தென"**
**(நற்.164 : 6-7)**

வளைந்த வில்லையுடைய ஆறலைக் கள்வர் செம்மையுற்ற கோல் வடிவாகிய அம்பினாலே பாலை வழியில் செல்லும் ஓதிலாளரைக் கொன்று உயிர் போனதால் இறந்து கிடந்த பிணங்கள் மலை போன்றும் இலைகளால் மூடப்பட்டு முடை நாற்றத்துடன் காணப்படுகிறது. இத்தகைய கொடியத் தொழிலை செய்பவர்கள் என்ற செய்தியை காணமுடிகிறது.

### பிற தொழில்கள்

நெசவு, பூ விற்றல், ஆடை வெளுத்தல் போல இன்னும் சில தொழில்கள் காணப்படுகின்றன. அவை எண்ணெய் பிழிதல், கழைக்கூத்து, நார்திரித்தல் போன்ற தொழில்களும் நடந்தேறியுள்ளன. இத்தகைய தொழில்கள் மக்களின் அன்றாட வருவாயை ஈட்டித் தரும் தொழிலாக இருந்துள்ளன.

**"பெருங்கயிறு நாலும் இரும்பனம் பிணையல்" (நற்.90 : 6)**

பண்டைய காலத்தில் பெண்கள் ஊசலாட பனை நாரினால் திரித்து தயாரிக்கப்பட்ட கயிற்றைப் பயன்படுத்தியுள்ளனர். இன்று நாம் தேங்காய் நார் பயன்படுத்துவது போன்று அன்றைய காலக்கட்டத்தில் மக்கள் பனை மர நாரில் கயிற்றைத் திரித்துள்ளனர் என்ற செய்தியை நற்றிணை பாடல் சுட்டியுள்ளது. மேலும் எள் விதைகளைக் கொண்டு எண்ணெய் எடுத்துள்ளனர்

**"எண்பிழி நெய்யோடு வெண்கிழி வேண்டாது" (நற்.328 : 8)**

விறலியர் ஆடும்போது எள்ளில் பிழிந்த நெய்யை பரிசாகப் பெற்றுக் கொண்டு ஆடுவர் என்ற பதிவின் மூலம் எண்ணெய் ஆட்டும் செக்குகளும் சங்க காலத்தில் இருந்தமையை அறியமுடிகிறது. சங்ககாலத்தில் தொழில் அடிப்படையில் பிரிக்கப்பட்ட குழுக்கள் பின்னாளில் குலமாக மாறியது எனலாம். "தொழில் பிரிவினர் காலவோட்டத்தில் குலங்களாய் குடிகளாய் ஆயின"[6] என பா.இறையரசன் கூறுகிறார் கழைக்கூத்தாடிகள் மூங்கில் கம்புகளுக்கு இடையே கட்டப்பட்ட கயிற்றில் நடந்து வித்தை காட்டுவதே கழைக்கூத்து என்பர்.

**"கழைபடு இரங்கப் பல இயங்க கறங்க**
**ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன்கயிற்று"**
**(நற்.95 : 1- 2)**

ஒரு பக்கத்தில் புல்லாங்குழல் ஒலிக்கிறது மறு பக்கத்தில் இசைக்கருவிகள் முழங்குகின்றன. முறுக்கான புரிகளால் ஆன வலிமையான கயிற்றில் கழை ஏறி விளையாட்டுகள் நடத்தி விளையாடியதை இலக்கியங்கள் காட்சிப் படுத்தியுள்ளன.

## முடிவுரை

சங்க காலத் தொழில் முறைகள் இயற்கையைச் சார்ந்ததாகவே அமைந்திருந்தன. மக்கள் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ளப் பலத் தொழில்களைச் செய்து வந்தனர். பெரும் பொருளை ஈட்டும் தொழில்கள் மட்டுமின்றி அன்றாட தேவைகளை நிறைவேற்ற குறுந்தொழில்களும் நிகழ்ந்துள்ளன. இதில் பலத் தொழில்களை பெண்களே செய்து வந்துள்ளனர். ஆண்களுக்கு நிகரான பெண்களும் அன்றையச் சூழலில் பெரும் முனைப்புடன் தொழில் முனைவோர்களாக இருந்துள்ளமையை இலக்கியங்கள் பதிவிட்டுள்ளன.

## கலைச்சொற்கள்

1. கோட்டுமா - பன்றி
2. முளவுமான் - முள்ளம் பன்றி
3. ஞமலி - நாய்
4. எண்பிழிநெய் - எண்ணெய்
5. சாறு - திருவிழா
6. புலத்தி - வண்ணாத்தி
7. குரீஇ - குருவி

## சான்றெண் விளக்கம்

1. திருக்குறள்., வ.சுப. மாணிக்கம் (தெ.உ)., ப.211
2. பா. இறையரசன்., தமிழர் நாகரிக வரலாறு., ப.192
3. ந.சுப்ரமண்யன்., சங்ககால வாழ்வியல்., ப.303
4. அ.தட்சிணாமூர்த்தி., தமிழர் நாகரிகமும் பண்பாடும்., ப.228
5. ந.சுப்ரமண்யன்., சங்ககால வாழ்வியல்., ப.312
6. பா.இறையரசன்., தமிழர் நாகரிக வரலாறு., ப.192

## பார்வை நூல்கள்


1. நாராயணசாமி ஐயர் (உ.ஆ). 2007. *நற்றிணை மூலமும் உரையும்*, சென்னை, கழக வெளியீடு.
2. இறையரசன், பா. 1993. தமிழர் நாகரிக வரலாறு, பூம்புகார் பதிப்பகம், சென்னை.
3. சுப்ரமண்யன், ந. 2010. சங்ககால வாழ்வியல், சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
4. தட்சிணாமூர்த்தி, அ. 1999. *தமிழர் நாகரிகமும் பண்பாடும்*, சென்னை, யாழ் வெளியீடு.
5. மாணிக்கம், வ.சுப. 1999. *திருக்குறள் தெளிவுரை*. சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.